**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.177/2025**

| Deposition of Name | கிருத்திகா | Prosecution | LW-1 as PW-1. |
|---|---|---|---|
| Father Name | மனோகரன் | Defence | |
| Village | பெருந்தோட்டம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 31/2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**06.04.2026.**

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரில் வசித்து சீர்காழி நகராட்சியில் ஒப்பந்த பணியாளராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 1 வது எதிரி எனது கணவர். 2வது எதிரி எனது மாமனார் ஆவார். எனக்கும் எனது கணவருக்கும் 11.02.2010 ம் ஆண்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் நடைபெற்றது. எங்கள் திருமணத்திற்கு முன்பு 1 வது எதிரிக்கும் ஆர்த்தி என்கிற பெண்ணுக்கும் தொடர்பு இருந்து வந்தது. அதை மறைத்து என்னை திருமணம் செய்து வைத்தார்கள். திருமணத்திற்கு பிறகும் என் கணவர் அந்த உறவை தொடர்ந்து வந்துள்ளார். எனக்கு கடந்த 2011 ம் ஆண்டு ஒரு பெண் குழந்தையும். 2012 ஆண்டு ஒரு ஆண் குழந்தையும் பிறந்தது. எனது மகன் பிறந்து பின்புதான் எனக்கு எனது கணவர் ஆர்த்தி என்கிற பெண்ணுடன் தொடர்பில் இருந்து வந்தது தெரிய வந்தது.

அதை பற்றி எனது கணவரிடம் கேட்ட போது அவர் அந்த பெண்ணை வீட்டிற்கு அழைத்து வந்து எனது மாமனார் மாமியாருடன் சேர்த்து என்னையும் எனது குழந்தைகளையும் அடித்து வெளியே அனுப்பி விட்டார்கள். உனக்கு இந்த வீட்டில் வாழ வேண்டும் என்றால் நகை, பணம் அனைத்தும் கொண்டு வந்தால் தான் உன்னை உள்ளே விடுவேன் என்று கூறினார்கள். நான் எனது குழந்தைகளுடன் எனது பெற்றோர் வீட்டிற்கு

வந்து விட்டேன். எனது பெற்றோர்கள் பெரியோர்கள் மூலம் எனது கணவர் வீட்டாரிடம் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டார்கள். ஆனால் அதை பொருட்படுத்தாமல் எனது கணவர் கடந்த 2018 ம் ஆண்டு என் மீது விவாரத்து வழக்கு தொடர்ந்துள்ளார். அந்த சமயம் நான் AWPS காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேன். அது DVC ஆக இந்த நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. எனது கணவர் தாக்கல் செய்த HMOP தள்ளுபடியானது. கொரோனா நேரத்தில் ஆஜராகாததால் DVC வழக்கும் தள்ளுபடி ஆனது.

கடந்த 12.06.2024 ம் தேதி நான் எனது குழந்தைகளை அழைதது கொண்டு மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளிடம் எனது கணவரும் அவருடன் வசிக்கும் ஆர்த்தி என்ற நபரும் எனக்கு கொடுத்த சீர்வரிசை பொருட்களை அனுபவித்து கொண்டு வருகிறார்கள் என்று புகார் கொடுத்தேன். அதனை விசாரித்து பதில் கூறுமாறு AWPS சீர்காழி க்கு அனுப்பி வைத்தார்கள். அப்போது எனது கணவர் எனக்கு சொந்தமான சீர்வரிசை பொருட்களை என்னிடம் திருப்பி கொடுத்து விடுவதாக தெரிவித்தும் என்னுடன் சேர்ந்து வாழ விருப்பம் உள்ளதாகவும் தெரிவித்திந்தார். ஆனால் என்னுடன் சேர்ந்து வாழ அவர் எந்தவித முயற்சியும் எடுக்க வில்லை எனவே போலிசார் அவரை தொடர்பு கொண்டு கேட்டதற்கு அதற்கு அவர் சரிவர பதில் கூறவில்லை.

எனவே கடந்த 23.06.2024 ம் தேதி நான் எனது குழந்தைகளை அழைத்து கொண்டு எனது கணவர் வீட்டிற்கு சேர்ந்து வாழ்வதற்காக சென்றேன். நான் வருவதை கவனித்த உடன் எனது கணவர் வீட்டார் என்னை உள்ளே வரவிடாமல் தடுத்தார்கள். உன்னை சேர்ந்து வாழவும் விடமாட்டோம் , பொருட்களையும் திருப்பி தரமாட்டோம் என்று என்னை தகாத வார்த்தைகளால் திட்டி வெளியே தள்ளினார்கள். எனது கணவர் எனது ஆடையை கிழித்து உயிர் மேல் ஆசையிருந்தார் உனது குழந்தைகளை அழைத்துக்கொண்டு உன் அம்மா வீட்டிற்கு ஓடிவிடு இல்லை என்றால் உன்னை கொன்று விடுவேன் என்றும் மிரட்டினார். இதுசம்பந்தமாக காவல் நிலையம் சென்று புகார் கொடுத்திருந்தேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நகல் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனுவை எதிரி தரப்பு வழக்கறிஞர்

ஆட்சேபனையுடன் **அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**